Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாரப்பாடசாலை

## செயலட்டை - 10

வாரம் - 03
2021. 07. 12- 2021.07.16

பாடம்:-பொருளியல்

தரம் -12

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

**தேர்ச்சி** 5.0:- பேரினப் பொருளாதாரச் செயற்பாட்டை கவனத்திற்கொண்டு தேசிய கணக்குகளை தயாரிக்கும் ஆயத்தத்தை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.4 :- உற்பத்தி வழிமுறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பீடு செய்யும் முறையையும் அதனுடன் தொடர்புடைய எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**உற்பத்தி எல்லை** :- பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகளையும் பொருளாதாரமல்லா உற்பத்தி நடவடிக்கைகளையும் வேறுபடுத்திக் காட்ட உதவும் ஓர் எண்ணக்கருவாக உற்பத்தி எல்லை காணப்படுகிறது.

**<u>பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.</u>**

1. உற்பத்தி வரம்பு என்ற பதத்தினை விளக்குக.
2. உற்பத்தி எல்லைக்குல் உள்ளடங்கி தேசிய கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கைகள் யாவை?
3. மறைந்த பொருளாதார நடவடிக்கைகள், சட்டவிரோதமான பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றை விளக்குக.
4. மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பீட்டில் உள்ளடங்காத பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகள் யாவை?
5. பொருளாதார பரப்பொன்றில் செயற்படும் நிறுவன அலகுகள் யாவை?
6. அடிப்படை விலை, உற்பத்தியாளர் விலை, கொள்வனவாளர் விலை ஆகிய எண்ணக்கருக்களை உதாரணங்களுடன் விளக்குக.

7. பின்வரும் தரவுகள் பொருளாதாரம் ஒன்றின் 2018ஆம் ஆண்டுக்குரியனவாகும். இத் தரவுகளைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடைகளை கணிக்குமாறு வேண்டப்படுகின்றீர். ( அனைத்து தரவுகளும் மில்லியன் ரூபாய்களில் உள்ளது.)

| | |
|---|---|
| * வேளாண்மை, காடாக்கல், மீன்பிடித்தல் | 156,000 |
| * கைத்தொழில் | 220,500 |
| * பணிகள் | 265,500 |
| * மானியம் கழித்த வரிகள் | 6,000 |
| * நிலையான மூலதன நுகர்வு | 5,000 |
| * வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -11,000 |
| * 2017ஆம் ஆண்டின் நிலையான விலையிலான உள்நாட்டு உற்பத்தி | 206,000 |
| * வெளிநாட்டிலிருந்து பெற்ற தேறிய தனியார் மாற்றல் | 150 |
| உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி (2010=100) | |

வேண்டப்படுவது,

1. அடிப்படை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
2. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
3. சந்தை விலைகளில் மொத்த தேசிய வருமானம் யாது?
4. சந்தை விலைகளில் தேறிய தேசிய வருமானம் யாது?
5. சந்தை விலைகளில் தேறிய உள்நாட்டு உற்பத்தி யாது?
6. நிலையான விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
7. 2018ம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் யாது?